# விஜயின் சதியை வென்று வீறுகொண்ட வீரராக பேரவைக்கு வந்தார் உதயநிதி ஸ்டாலின்!

தவெக அரசின் செயல்பாடற்ற
தன்மை குறித்து
சட்டப்பேரவையில்…

எதிர்க்கட்சித் தலைவர்
உதயநிதி ஸ்டாலின்
தனது கேள்விக் கணைகளால்
துளைத்தெடுத்து வருகிறார்

இதனால் சட்டப்பேரவை
அரங்குக்கு
உதயநிதி ஸ்டாலின்
வந்தாலே,
முதலமைச்சர் விஜயும்…
அவரது அமைச்சரவை
சகாக்களும் அஞ்சி நடுங்கி
வருகின்றனர்

இந்நிலையில், தமிழ்நாடு
சட்டப்பேரவையின்
பட்ஜெட் கூட்டத்தொடரில்…

எதிர்க்கட்சி தலைவர்
உதயநிதி ஸ்டாலினை
பங்கேற்கவிடாமல்
செய்ய முயற்சி

உதயநிதி ஸ்டாலின் மீது
பொய் வழக்கு போட்டு
பல்வேறு தகிடுதத்த
வேலைகளை…

முதலமைச்சர் விஜயும்,
அவரது கட்டுப்பாட்டில்
உள்ள காவல்துறையும்
மேற்கொண்டன

கோமாளி ஆட்சியின்
கொடூரப் புத்தியால்
கைது செய்யப்பட்ட
எதிர்க்கட்சித் தலைவர்
உதயநிதி ஸ்டாலின்,
உயர்நீதிமன்ற உத்தரவைத்
தொடர்ந்து விடுவிப்பு

எதிர்க்கட்சித் தலைவர்
உதயநிதி ஸ்டாலினை
உடனடியாக விடுவிக்க
வேண்டும் என உத்தரவிட்டு…

முதலமைச்சர் விஜயின்
எண்ணங்களை
உயர்நீதிமன்றம்



தவிடுபொடியாக்கியது

சட்டப்பேரவை கூடும் நிலையில்,
எதிர்க்கட்சித் தலைவர்
பங்கேற்கக்கூடாது என்பதற்காக…

உதயநிதி ஸ்டாலினை
முடக்க நினைத்த
முதலமைச்சர் விஜய்
அசிங்கப்பட்டுப் போனார்

காவிரி பிரச்சினையில் அரசின்
தோல்வியை மறைக்கவும்,
பிரச்சினையையே

திசை திருப்பவும்….

எதிர்க்கட்சித் தலைவர் மீது
பொய் வழக்கு போட்டு
விஜய் அரசு கைது செய்தது

விவசாயிகளுக்காக
திமுக போராடியதை
திசைதிருப்பவே
கைது நாடகத்தை
கையாலாகாத
தவெக அரசு
அரங்கேற்றியது

காவிரி விவகாரத்தில்
தவெக அரசின்
தோல்வியை, சட்டசபையில்
அம்பலப்படுத்துவோம் என
எதிர்க்கட்சித் தலைவர்
கூறியநிலையில்…

அதற்கு அஞ்சி,
திடீரென அவரை
தவெக அரசு
கைது செய்ததாக
பலரும் சாடினர்

சட்டசபையில்
எதிர்க்கட்சித் தலைவர்
கேள்வி எழுப்பினால்
பதிலளிக்க முடியாது
என்ற அச்சத்தில்…

உதயநிதி ஸ்டாலினை
முடக்க முயற்சித்த
விஜயின் சூழ்ச்சி
தவிடுபொடியாகியுள்ளது

முதலமைச்சர் விஜயின்
சதியை வென்று
வீறுகொண்ட வீரராக
சட்டப்பேரவைக்குள்
எதிர்க்கட்சித் தலைவர்
உதயநிதி ஸ்டாலின்
'அதிரடி என்ட்ரி'
கொடுத்துள்ளார்

எதிர்க்கட்சி தலைவர்
உதயநிதி ஸ்டாலினின்
அதிரடி என்ட்ரியால்
தவெக அரசு
மிரண்டு போயுள்ளது.

# சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!… முதல் பக்கத் தொடர்ச்சி

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்த, செயல்படுத்திய திட்டங்களைத்தான் இன்றைக்குப் பெயரை மாற்றியிருக்கிறார்கள்.

### அரசுக்கு நன்றி சொல்ல வேண்டும்!

இதில் இன்னொரு சிறப்பு. இந்த அரசுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு துறையைப் பற்றியும், நிதி அமைச்சர் பேசும்போது அவர் குறிப்பிட்டுப் பேசுகிறார். பட்ஜெட்டில் இடம் பெற்றிருக்கிறது. `இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருக்கிறது' என்று மிகவும் மகிழ்ச்சியாக, பெருமையோடு சொல்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளையெல்லாம் இப்போதாவது ஒப்புக்கொண்டார் என்பதற்கு, நாங்கள் எங்களின் நன்றியை இந்த அரசுக்கும், நிதி அமைச்சருக்கும், முதலமைச்சருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

`அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்', `அண்ணல் அம்பேத்கர் அயலகக் கல்வி உதவித் திட்டம்', `அயோத்திதாசர் ஆதிதிராவிடர் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்', `ஒலிம்பிக் சிறப்பு மையங்கள்' என எல்லாமே எங்களின் `திராவிட மாடல் அரசி'ல் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்தான். வெறும் பெயரை மட்டும் அவர்களின் கட்சிப் பெயரை `வெற்றி', `வெற்றி' என்று அனைத்துத் திட்டங்களின் மீதும் ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறார்கள்.

### பெயரை மட்டும் மாற்றியிருக்கிறார்கள்

`அன்புச் சோலை' என்று நாங்கள் கொண்டு வந்த திட்டத்திற்குப் பெயரை மாற்றி இன்றைக்கு `முதியோர் பொழுது போக்கு மையங்கள்' என்று பெயரை மாற்றியிருக்கிறார்கள். நாங்கள் எங்களின் தலைவர் ஆட்சியில் கொடுத்த மடிக்கணினித் திட்டம் உங்களுக்குத் தெரியும். `உலகம் உங்கள் கையில்' என்று அந்தத் திட்டத்திற்கு எங்கள் தலைவர் பெயர் வைத்து கடந்த ஆண்டு 20 லட்சம் அறிவித்தோம், 10 லட்சம் மாணவர்களுக்குக் கொடுத்தோம். அதை இன்றைக்குப் பெயரை மாற்றி 'வெற்றி மடிக்கணினி திட்டம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

`கலைஞர் கனவு இல்லத் திட்டம்' அதன் பெயரை மாற்றி `வெற்றி வீடு திட்டம்' என்று வைத்திருக்கிறார்கள். அதேபோன்று `மாடல் ஸ்கூல்ஸ்' அவற்றை `தகைசால் பள்ளிகள்' என பெயரை மாற்றியிருக்கிறார்கள்.

`முதல்வர் படைப்பகங்கள்' எங்களின் ஆட்சியில் கொண்டு வந்த திட்டம், அதை இன்றைக்கு `டிஜிட்டல் நூலகம்' என்று பெயர் மாற்றியிருக்கிறார்கள். அதற்கும் பார்த்தீர்கள் என்றால், வெறும் 10 கோடி ரூபாய்தான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எங்களின் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட `நன்னிலம் திட்டம்' அதற்குப் பெயரை மாற்றி இன்றைக்கு `மண்ணின் மகள் திட்டம்' என்று பெயரை மட்டும் மாற்றியிருக்கிறார்கள்.

தேர்தலுக்கு முன் எங்களுடைய தலைவர் தலைமையிலான அரசு தாக்கல் செய்த வரவுசெலவுத் திட்டத்தில் கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சி எனப் பல்வேறு சமூக நலத் திட்டங்கள் இருந்தன.

ஒவ்வொரு ஆண்டும் கல்வித்துறைக்கான ஒதுக்கீடு எங்களின் திராவிட மாடல் ஆட்சியில் பார்த்தீர்கள் என்றால் கடைசியாகத் தாக்கல் செய்த வரவுசெலவுத் திட்டத்தில் 48,500 கோடி ரூபாய் கல்விக்கு எங்களுடைய தலைவர் ஒதுக்கியிருந்தார். இப்போது அதைக் குறைத்து 44,500 கோடி ரூபாய்தான் இந்த முறை ஒதுக்கியிருக்கிறார்கள்.

### காவிரியில் தண்ணீர் வரவில்லை!

நாங்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பதைப் போன்று, காவிரியில் தண்ணீர் வரவில்லை. ஆடி 18 அன்றைக்குக்கூட தண்ணீர் வராத ஒரு சூழலை, இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

நேற்று `தி இந்து' ஆங்கில நாளிதழில் ஒரு செய்தி வந்திருக்கிறது. “கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, இந்த ஜூலை மாதத்தில் காவிரி நீர் வரத்துக் குறைவாக இருக்கிறது” என்று அந்தப் பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள்.

மேகதாது அணை கட்டும் கர்நாடகாவைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த ஆட்சிக்கு வக்கில்லை, தைரியம் இல்லை. வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி அமைந்ததிலிருந்து இந்த மூன்று மாதமாக யார் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்தீர்கள் என்றால், விவசாயிகள் தான் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

“முழுப் பயிர்க்கடன் தள்ளுபடி” என்று தேர்தல் வாக்குறுதி சொன்னார்கள். ஆனால் இப்போது அதற்கு ஒரு நிபந்தனை போட்டு அதையும் மாற்றியிருக்கிறார்கள். ஆனால், அதையும் செயல்படுத்தவில்லை. முதலில் 50,000 ரூபாய் என்று சொன்னார்கள், எதிர்ப்புத் தெரிவித்ததும் அதை 75,000 ரூபாயாக மாற்றினார்கள். அதையும் முழுமையாகச் செயல்படுத்தவில்லை.

### கவனத்தைத் திசை திருப்பும் உத்திகள்!

தஞ்சாவூரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் நாங்களெல்லாம் கலந்துகொண்டு, விவசாயிகள் சந்திக்கக்கூடிய பிரச்சினைகளையெல்லாம் பேசினோம். அதற்காக நேற்று என் வீட்டிற்குள் புகுந்து கைது செய்தார்கள். கைது செய்து எப்படியெல்லாம் அலைக்கழித்தார்கள் என்று ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் பார்த்தது. குறிப்பாக, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி நாங்கள் எதுவும் கேள்வி கேட்டுவிடக் கூடாது என்று கவனத்தைத் திசை திருப்பும் உத்தியாக விவசாயிகளுடைய சிக்கலைத் திசை திருப்ப வேண்டும் என்று நேற்று அந்த நாடகத்தை நடத்தினார்கள்.

என்னை மட்டும் இல்லை, தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் கைது செய்து கொண்டிருக்கிறார்கள்.

அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்துப் பார்த்து பர்சேஸ் செய்து கொண்டிருக்கிறார்கள். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை மட்டும் இல்லை, GENZ தி.மு.கவினரையும் வலைவீசித் தேடி, குறி வைத்து அவர்களை எல்லாம் கைது செய்து கொண்டிருக்கிறார்கள், வழக்குத் தொடர்ந்துகொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் இந்த ஆட்சியில் ஒவ்வொரு நாளும் அவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன. அதையெல்லாம் திசைதிருப்ப இந்த கைது நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

### சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு!

கடந்த 100 நாட்களாகச் சட்டம் ஒழுங்கு பிரச்சினை சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது. குழந்தைகள், பெண்கள், வயதான பெண்கள் இவர்கள் யாருக்குமே இந்த அரசில் பாதுகாப்பு இல்லை. ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த 5 வாரங்களில் மட்டும் நான்கு காவல்நிலைய மரணங்கள் நடந்திருக்கின்றன. ஐந்து சாதி ஆணவப் படுகொலைகள் நடந்திருக்கின்றன. இதையெல்லாம் தினசரி செய்திகளில் நீங்களே ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறீர்கள், மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்த சிலர் குற்றம் செய்வதற்கு லைசென்ஸ் வாங்கியது போல் அவ்வளவு குற்றச்செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். துணிச்சலோடு தைரியமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பழனி கோயில் நில மோசடியைப் பார்த்து இன்றைக்கு ஒட்டுமொத்தத் தமிழ்நாடே அதிர்ந்து போயிருக்கிறது. இந்த அரசு ஆட்சிக்கு வந்ததும் மின்சாரம் வருவதில் முதல் நாளிலிருந்தே பிரச்சினை. இப்போது மின்சாரக் கட்டணம் மிகப்பெரிய ஒரு பிரச்சினையாக மாறியிருக்கிறது. கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் குடும்பங்களுக்கு வழக்கத்தை விடப் பல மடங்கு அதிகமாக மின்சாரக் கட்டணம் வந்திருக்கிறது. அமைச்சர்கள் அரசுப் பள்ளிகளுக்குச் சென்று அங்கு இருக்கக்கூடிய மாணவர்களையெல்லாம் வெளியே வரச் சொல்லி, இந்தக் கட்சியின் பெயரை 'கோஷம்' போடச் சொல்லி, மாணவர்களையெல்லாம் வற்புறுத்தி, அதை 'ரீல்ஸ்' எடுத்து, வீடியோ எடுத்து அதையெல்லாம் பதிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

### இதற்கு எதற்கு முதலமைச்சர்?

இன்றைக்கு இந்தியாவே நீட் தேர்வை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறது, அதை எதிர்த்து இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவே இல்லை. அதற்கு மாறாக, போராடுகின்ற மாணவர்கள் மீது இந்த அரசு தடியடி நடத்தியிருக்கிறது. விலைவாசியும் உயர்ந்து கொண்டே போகிறது. அரிசி விலை பல மடங்கு அதிகமாகியிருக்கிறது. ஆனால், இதையெல்லாம் கேட்டால் முதலமைச்சர் பதில் சொல்ல மாட்டார். முதலமைச்சருக்குப் பதிலாகப் பொதுப் பணித்துறை அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் என்று ஒரு முதலமைச்சருக்கு முன்ஜாமீன் வாங்குகிறார். இந்த மாதிரி ஒரு நகைச்சுவையை இந்திய ஜனநாயகம் எந்த மாநிலத்திலும், எந்தச் சட்டமன்றத்திலும் பார்த்திருக்காது.

நேற்றே பொதுப்பணித்துறை அமைச்சர் பேசியிருக்கிறார். அதாவது அவை முன்னவர் தீர்மானம் கொண்டு வர வேண்டுமாம். எதிர்க்கட்சிகள் ஏதாவது கேள்வி கேட்டால் அதற்கு முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையாம், இவர்கள்தான் பதில் சொல்வார்களாம். இதற்கு எதற்கு முதலமைச்சர் அவைக்கு வர வேண்டும், இதற்கு எதற்கு நாங்களெல்லாம் அவைக்கு வர வேண்டும் என்கின்ற கேள்வியைப் பத்திரிகையாளர்களாகிய நீங்கள் இந்த அரசைப் பார்த்துக் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்சி அமைந்த உடனே, “கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற கால அவகாசம் வேண்டும்” என்று முதலமைச்சர் கேட்டார். இந்த பட்ஜெட்டில் அதையாவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அதைச் சொல்வதற்குக்கூட அவர்களுக்கு நேரமில்லை. இன்னும் கால அவகாசம் கேட்கிறார்கள். எனவே நடக்கப்போகும் கூட்டத்தொடர் முழுவதும் ஆணித்தரமாகவும், உறுதியாகவும் மக்கள் பிரச்சினைகளை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எங்களுடைய தலைவருடைய அறிவுறுத்தலின் பேரில், கேள்வி கேட்கத் தயாராக இருக்கிறோம், பதில் சொல்ல இந்த அரசு தயாராக இருக்க வேண்டும்.

**கேள்வி** : கலைஞர் மகளிர் உரிமைத் தொகை…

**பதில்** : கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தைப் பற்றி அவர்கள் பேசவே இல்லை. 2,500 ரூபாயாக உயர்த்தி கொடுப்போம் என்று சொன்னார்கள். அது பற்றி இந்த பட்ஜெட்டில் அவர்கள் பேசவே இல்லை.

**கேள்வி** : பல்வேறு திட்டங்களுக்கு `வெற்றி' என்று பெயர் மாற்றி இருக்கிறார்கள் அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்** : எல்லாருக்கும் `மாற்றம்' மாற்றம் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன மாற்றம் இதுதான். எல்லா திட்டங்களுக்கும் பெயரை மாற்றியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன ஒரே மாற்றம் இதுதான்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்தார்.

## தாம்பரம் பரணி

தாமிரபரணியை
தாம்பரம் பரணி
என்று வாசித்த நிதியமைச்சர்

துண்டுவிழும்
பட்ஜெட்டுகளை
பார்த்திருக்கிறோம்

ஆனால்

தமிழே
துண்டு துண்டாக விழும்
பட்ஜெட்டை
இப்பத் தான்
பார்க்கிறோம்..

மொதல்ல இந்த நிதிமந்திரிக்கு



தமிழ் சொல்லிக் கொடுக்க
பட்ஜெட்ல
பணம் ஒதுக்குங்கோப்பா….

என்னநாஞ்
சொல்றது



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*